நோயாளிகள் வருவதால் நெருக்கடியாக இருக்கிறது. எனவே உரிய நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இது இரண்டு மூன்று வகையான நெருக்கடி நேரம். மருத்துவ மனைகளிலே வரும் எண்ணிக்கை அதிகம். அதிலும் ஒரு நெருக்கடி. நிதி நெருக்கடி இன்னொரு பக்கம். 25,000 ரூபாய் நிதி கிடைத்தது. நன்கொடையாக அவர்கள் அளித்த அந்த நிதி போதாது. அதேபோல இடமும் போதுமானதாக இல்லை. நிலம் சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிககப் பட்டிருக்கிறது. அந்த இடமும் கிடைத்த பிறகு, இந்த நிதியை அதிகப்படுத்தி கட்டடத்தைத் துவக்க முயற்சிக்கப்படும்.

குடிநீர் வழங்கு திட்டங்கள்

***252 வினு—திரு. ஏ. பாலையா:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், கல்லுக்கூட்டம் குடிதண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கல்லுக்கூட்டம், திங்கள் சந்தை மற்றும் நெய்யூர் பேரூராட்சிகளுக்குக் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ஆய்வு மதிப்பீடு ஒன்றுக்கு 17—10—74 அன்று ஒப்புதலளித்தது. மேல் குறிப்பிட்ட மூன்று பேரூராட்சிகளும் அவரவர்களின் விகிதாசார ஆய்வுத்தொகை முழுவதையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தியுள்ளார்கள். மேற்படி திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் 1975 ஏப்ரல் முதல் வாரத்தில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆய்வு வேலைகள் முடிவடைந்தவுடன் இப்பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்படும்.

***253 வினு—திரு. சீ. க. வடிவேலு:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், மேட்டுப்பாளையம், தாத்தையங்கார்பேட்டை ஆகிய பேரூராட்சி

1975 நவம்பர் 10] [திரு. சி. க. வடிவேலு]

களுக்குக் குடிதண்ணீர் திட்டம் வேண்டும் என்று கோரிக்கைகள் ஏதேனும் அண்மையில் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) (1) மேட்டுப்பாளையம் பேரூராட்சி குடிநீர் கோரிக்கையின் ஆய்வுக்கான மதிப்பீடு ரூ. 10,800 ஐச் செலுத்திய பின் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

(2) தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சி, குடிநீர் கோரிக்கையின் ஆய்வுக்கான மதிப்பீடு ரூ. 33,000-ஐச் செலுத்த முன்வரவில்லையாகையால் அப்பேரூராட்சியின் கோரிக்கை கைவிடப்பட்டுள்ளது.

திரு. சி. க. வடிவேலு : தலைவரவர்களே, சில பேரூராட்சிகளில் நிர்வாகம் செய்வதற்கே மிகவும் நெருக்கடியான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதை உணர்ந்து தமிழக அரசே ஆய்வுக்கான செலவை ஏற்று நடத்த முன்வருமா ? அது நீண்ட நாட்களாக வறட்சிப் பகுதியாக இருக்கிறது. குறிப்பாகச் சென்ற ஆண்டில் தண்ணீர்ப் பஞ்சம் அதிக அளவில் ஏற்பட்டு மக்கள் மிகவும் அவதிப்பட்டார்கள். அதை மனதில் வைத்து அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே உள்ள கிராமங்கள், பேரூராட்சிகள்—அகில இந்தியாவில்—மாநில அளவில் பார்த்தால் ஏராளம். இந்த ஏராளமான இடங்களுக்கு முன்னுரிமை தந்து செயலாற்றும் முறையில், ஆய்வு நடத்துவதற்காகப் பணம் கட்டிய இடங்களுக்கு ஆற்ற வேண்டிய பணியை ஆற்றிவிட்டு, ஆய்வுக்கும் சேர்த்துப் பணம் போட வேண்டிய பேரூராட்சிகளுக்கு அதைத் திரும்பக் கட்டுவதற்கான ஆற்றல் இருக்காது என்பதால் பிறகு நிதி வசதி உள்ளபோதுதான் கவனிக்கப்படும்.